செய்தி வெளியீட்டு எண்.974 நாள்: 3.11.2010

## மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் தமிழக அரசிற்கும் சாம்சங் இந்தியா எலக்ட்ரானிக்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கும் இடையே விருப்ப அறிவிப்பு கடிதம் கையெழுத்தாகியது.

கொரியா நாட்டைச் சேர்ந்த சாம்சங் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம் மின்னணு தயாரிப்பு சாதனங்கள், தொலைத்தொடர்பு, டிஜிட்டல் தொழில்நுட்ப சாதனங்கள் தயாரிப்பில் உலக புகழ்பெற்ற நிறுவனமாகும். சாம்சங் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்திற்கு சொந்தமான சாம்சங் இந்தியா எலக்ட்ரானிக்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், குளிர்சாதனப் பெட்டிகள், சலவை இயந்திரங்கள், மின்னணு வன்பொருட்கள், எல்.சி.டி. திரைகள், கணினி அச்சுக்கள் மற்றும் தொழில்நுட்ப பொருட்களை தயாரிக்க ரூபாய் 450 கோடி முதலீட்டில் தொழிற்சாலையைத் தொடங்க 10.11.2006–ல் தமிழக அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டது. மேற்குறிய திட்டத்தை செயல்படுத்திட சாம்சங் நிறுவனத்திற்கு அமைப்பு முறையிலான தொகுப்பு சலுகையை தமிழக அரசு வழங்கியது.

அண்மையில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் கொரிய நாட்டிற்கு பயணம் மேற்கொண்டபோது, தமிழகத்தில் ஸ்ரீபெரும்புதூர் சிப்காட் தொழிற் பூங்காவில் உள்ள சாம்சங் தொழிற்சாலையை கூடுதல் முதலீட்டுடன் விரிவாக்கம் செய்ய சாம்சங் நிறுவனம் விருப்பம் தெரிவித்தது. இந்த விரிவாக்கத் திட்டத்தின் மூலம் நுகர்வோர் மின்னணுப் பொருட்கள், தகவல் தொழில்நுட்ப பொருட்கள், கைப்பேசி மற்றும் கைப்பேசி உதிரி பாகங்கள் ஆகியவற்றை தயாரிக்க சாம்சங் நிறுவனம் கருதியுள்ளது. விரிவாக்கத் திட்டத்திற்காக கூடுதலாக ரூபாய் 350 கோடி முதலீடு செய்யவும் சாம்சங் நிறுவனம் முடிவு செய்துள்ளது. தொழிற்சாலை விரிவாக்கத்திற்காக சில கூடுதல் சலுகைகளை வழங்குமாறு சாம்சங் நிறுவனம் தமிழக அரசை கேட்டுக் கொண்டுள்ளது. சாம்சங் தொழிற்சாலை விரிவாக்கம் செய்யப்படுவதால் சுமார் 1000 பேர்களுக்கு நேரடியாகவும், சுமார் 2000 பேர்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைக்கும்.

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் இன்று (3.11.2010) புனித ஜார்ஜ் கோட்டையில், ஸ்ரீபெரும்புதூர் சிப்காட் தொழிற் பூங்காவில் உள்ள சாம்சங் தொழிற்சாலையை கூடுதல் முதலீட்டுடன் விரிவாக்கம் செய்வது குறித்த விருப்ப அறிவிப்பு கடிதத்தில், தமிழக அரசின் சார்பில் தொழில்துறை முதன்மைச் செயலாளர் திரு. ராஜீவ் ரஞ்சன் அவர்களும், சாம்சங் இந்தியா எலக்ட்ரானிக்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் சார்பில் அதன் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.ஜே.எஸ். ஷின் அவர்களும் கையெழுத்திட்டனர்.

இந்நிகழ்வின்போது, சிப்காட் நிறுவனத்தின் தலைவர் திரு. நிரஞ்சன் மார்டி, தமிழ்நாடு தொழில் வழிகாட்டி அமைப்பின் செயல் துணைத் தலைவர் திரு.எம். வேல்முருகன், சாம்சங் நிறுவனத்தின் தென்மேற்கு ஆசியா இயக்குநர் திரு.ஜே.எச். கியாங், சென்னை தொழிற்சாலையின் மேலாண்மை இயக்குநர் திரு. ஜே.டபிள்யு. கிம் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.